# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 390/2025 |
| Prosecution Witness | : | **அ.சா.**1 |
| Name | : | மணிகண்டன் (**தலைமை காவலர்** ) |
| Father's / Husband Name | : | **சாமிக்கண்ணு** |
| Address | : | **மதுவிலக்கு அமலாக்க பிரிவு** |
| Age | : | 41/2026 |

**<u>தேதி : 04/03/2026</u>**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.ஆ. சத்தியபாமா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். நான் இதற்கு முன்பு பெரம்பலூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது 22.08.2025ம் தேதி அன்று மதுவிலக்கு அமலாக்க பிரிவு உதவி ஆய்வாளர் மாரிமுத்து அவர்களுடன் நானும், தலைமை காவலர் தமிழரசு ஆகியோர்களுடன் மது சம்மந்தமாக பழைய பேருந்து நிலையம் கடைவீதி ஆகிய பகுதிகளில் ரெய்டு சென்றுக்கொண்டிருந்போது உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி ஆத்தூர் ரோட்டில் உள்ள டாஸ்மாக் கடையில் காலை 14.00 மணிக்கு சோதனை செய்தபோது ஒரு நபர் எங்களை கண்டதும் தப்பிக்க முயற்சிசெய்தார். அவரை பிடித்து விசாரித்தபோது முன்னுக்கு பின் முரணாக கூறி அவருடைய பெயர் முரளி என்று கூறினார். அவர் ஆஜர் எதிரிதான். அவர் ்கையில் வைத்திருந்த பையை வாங்கி உதவி ஆய்வாளர் சோதனை செய்தபோது அந்த பையில் 180 m.l. அளவுள்ள Monitary பிராந்தி பாட்டில்கள் 10 இருந்தது.

அரசு மதுபான கடை மூடிய பிறகு அதிக விலைக்கு விற்பதற்காக வாங்கி வைத்திருந்ததாக சொன்னார். பின்பு 14.10 ணிக்கு எதிரியை கைது செய்து 14.15 மணிக்கு எதிரியின் உறவினருக்கு கைது குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டது. எதிரியிடமிருந்து மது பாட்டில்களை கைப்பற்றி கைப்பற்றுதல் மகசரை உதவி ஆய்வாளர் தயார் செய்தார். அதன்பிறகு 14.15 மணி முதல் 14.25 மணி வரை மதுபாட்டில்களை திறந்து மதுவை கீழே கொட்டி அழித்து எங்கள் முன்னிலையில் அழித்தல் மகசரை உதவி ஆய்வாளர் தயார் செய்தார். கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசரில் நானும், தலைமை காவலர் தமிழரசன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யபப்படுகிறது.** பின்பு எதிரியை 14.30 மணிக்கு காவல் நிலையம் அழைத்துவந்து காவல் நிலைய குற்ற எண். 112/2025 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024ன்படி முதல் தகவல்அறிக்கையை உதவி ஆய்வாளர் பதிவு செய்தார். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

நான் என்னுடைய உதவி ஆய்வாளருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்தில வைத்து தயார் செய்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும், எதிரியை சொன்ன நாள், நேரத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.